அக்டோபர் 2015

விலை ரூ. 10

# கோகுலம் கதிர்



வெனிஸ்
திரைப்பட விழாவில்
வென்ற தமிழ்ப்படம்!

கிராமத்தை
தத்தெடுக்கும்
நடிகர்!

ஏழரை சனி
என்ன செய்யும்?

இயற்கை
முறையில்
இளநரை
மறைய...

இத்துடன்
மாத ராசி
பலன்கள்!
இணைப்பு புத்தகம்!

## 'தனி ஒருவன்' இந்திய திரைப்படத்தில் முதல் முறை!


'தனி ஒருவன்' ராஜா, அரவிந்த்சாமி

ஜெயம் ரவி அவர் அண்ணன் மோகன் ராஜா டைரக்‌ஷனில் நடித்துள்ள தனி ஒருவன் படம் மிகப் பெரிய வெற்றியை அடைந்து வெற்றி விழாவையும் நடத்தி அசத்தி உள்ளது. இந்தப் படத்தில் ஜெயம் ரவி, அரவிந்த் சாமி, நயன்தாரா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்து தங்கள் முத்திரையைப் பதித்துள்ளனர். ஜெயம் ரவி படங்களில், அதிக வசூலைப் பெற்ற படம் என்ற சாதனையைப் பெற்றுள்ளது.

'தனி ஒருவன்' படத்திற்காக இயக்குநர் மோகன் ராஜா தொழில்நுட்ப வல்லுனர்கள் மற்றும் ஆலோசகர்களைப் பயன்படுத்தி இப்படத்தை உருவாக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது. நுணுக்கமான தகவல்கள், உண்மையாக இருக்கவேண்டும் என்பதற்காக ஆய்வு செய்து தருவதற்கு Fyhzics Business Consultants என்ற நிறுவனத்தை பயன்படுத்தியுள்ளது இந்திய திரைப்படத்தில் இதுவே முதல்முறை. இந்நிறுவனம், இந்தியாவில் ஹாலிவுட்டுக்கு நிகரான திரைப்படங்கள் உருவாவதற்கு தேவையான தகவல், தொழில்நுட்பங்களை ஆராய்ந்து வழங்குவதற்காக செயல்பட்டு வருகிறது.

## ராணியின் கட்டளை!


ஸ்ரீதேவி

நீண்ட இடைவெளிக்குப் பின் நடிகை ஸ்ரீதேவி 'புலி' படத்தில் ராணியாக நடிக்கிறார். இதில் நடிகர் விஜய் கதாநாயகனாக நடிக்கிறார். இந்தப் படத்தின் டிரைலர், பாடல்கள் சமீபத்தில் வெளியிடப்பட்டு விஜய் ரசிகர்களிடையே அதிக வரவேற்பைப் பெற்றுள்ளது.

நடிகை ஸ்ரீதேவியின் பர்ஸ்ட் லுக் போஸ்டரும் வெளியிடப் பட்டுள்ளது. இந்த போஸ்டரை தனது டுவிட்டர் இணைய தளத்தில் வெளியிட்டுள்ள ஸ்ரீதேவி, 'அக்டோபர்-1 அன்று வெளியாகும் 'புலி' படத்தை அனைவரும் உங்கள் குடும்பத்துடன் தியேட்டருக்குச் சென்று படத்தைப் பார்த்து மகிழ்ச்சி தெரிவியுங்கள்' என்று தெரிவித்திருக்கிறார்.

## கிராமத்தைத் தத்தெடுக்கும் நடிகர்!

நடிகர் பிரகாஷ்ராஜ், தெலங்கானாவிலுள்ள ஒரு கிராமத்தை தத்தெடுக்க விருப்பம் தெரிவித்துள்ளார். தெலுங்கா னாவிலுள்ள மகபூப் நகர் மாவட்டத்தில் உள்ள கொண்டாரெட்டி பள்ளி கிராமத்தை தத்தெடுக்க விரும்புவதாக ஆந்திர மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சரிடம் தனது விருப்பத்தைத் தெரிவித்துள்ளார். அவர் விருப்பத்திற்கு, மாநில அரசு ஆதரவு அளிக்கும் என்று அமைச்சர் கூறியுள்ளார்.


பிரகாஷ்ராஜ்

## தமிழ் பேசும் நடிகை!

'ஓ காதல் கண்மணி' படத்தில் லைவ் சவுண்ட் என்ற சிங்க் சவுண்ட் முறையைப் பயன்படுத்தி டைரக்டர் மணிரத்தினம் படத்தை எடுத்தார். எடுக்கப் போகும் புதிய படத்திலும் இந்த முறையையே பயன்படுத்த உள்ளதால், படத்தில் தமிழ் தெரிந்த நடிகை தான் பொருத்தமாக இருப்பார் என முடிவு செய்துள்ளார். நடிகை கீர்த்தி சுரேஷ் நன்றாகத் தமிழ் பேசுபவர் என்பதால் அவருக்கு இந்த வாய்ப்பு கிடைத்துள்ளது. இவர் பழைய நடிகை மேனகாவின் மகள்.

## வெனீஸ் திரைப்பட விழாவில் வென்ற படம்!

'விசாரணை' திரைப்படம் 72-வது வெனீஸ் சர்வதேச


கீர்த்தி சுரேஷ்